"இனிமையான குழந்தைகளே ! நீங்கள் இப்போது தூய்மையான ஜீவாத்மாக்களாக ஆக வேண்டும். இந்த சமயத்தில் யாரும் தூய்மையான ஜீவாத்மா இல்லை ஆதலால் தன்னை மகாத்மா என்றும் கூட சொல்லிக் கொள்ள முடியாது"

கேள்வி: சத்யுக இராஜ்யம் எனும் பரிசு எந்த குழந்தைகளுக்குக் கிடைக்கிறது?

பதில்: யார் ஸ்ரீமத்படி நினைவின் பந்தயத்தில் முதல் நம்பரில் செல்கிறார்களோ, அவர்களுக்குத் தான் இராஜ்யத்தின் பரிசு கிடைக்கிறது.வேகமான பந்தயம் இருந்தால் பதிவேட்டில் பெயர் நன்றாக இருக்கும், மேலும் பரிசுக்கு உரிமையுடையவர்கள் ஆவார்கள். குழந்தைகளாகிய நீங்கள் தொலைநோக்குள்ளவர்களாக ஆகி மிக தூரமான (இலக்கை அடைய) பந்தயம் செய்கிறீர்கள். ஒரு வினாடியில் குறிகோளை (பரந்தாமம்) அடைந்து பிறகு திரும்பி வருகிறீர் கள். உங்களுடைய புத்தியில், நாம் முதலில் முக்திக்கு செல்வோம் பிறகு ஜீவன் முக்திக்கு வருவோம், என்பது இருக்கிறது. உங்களைப்போல் பந்தயம் வேறு யாரும் செய்ய முடியாது.

பாடல்: கடைசியில் அந்த நாளும் வந்தது இன்று...............

ஓம் சாந்தி: கடைசியில் அந்த நாளும் வந்தே விட்டது, என்று யார் தெரிந்திருக் கிறார்கள்? பாபாவிற்கு முன்னால் இருக்கும் குழந்தைகளாகிய நாம் தெரிந்துள்ளோம், அந்த நாளும் வந்தே விட்டது. ஆத்மா இந்த சரீரத்தின் மூலம் சொல்கிறது. இப்பொழுது நீங்கள் அமர்ந்துள்ளீர்கள், ஆத்மாக்களாகிய நாம் பரமபிதா பரமாத்மாவிற்கு முன்னால் அமர்ந்திருக் கிறோம், என்பதை தெரிந்திருக்கிறோம். உண்மையில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆத்மாக்களாகிய நாம் அதாவது ஜீவாத்மாக்கள், பரமாத்மாவை நேராக சந்தித்திருந்தோம். இது என்னுடைய சரீரம், என்று ஆத்மா கூறுகிறது. இது என்னுடைய ஆத்மா, என்று சரீரம் சொல்லாது. கடைசியில் ஆத்மாக்களாகிய நம்முடைய தந்தை இன்று வந்துள்ளார். பக்திக்குப் பிறகு ஞானம் கொடுக்க வரத்தான் வேண்டும். ஞானத்தின் மூலம் சத்கதியை ஏற்படுத்துவதற்கு கடைசியில் வந்திருக்கிறார். இதை முழு உலகமும் தெரிந்திருக்க வில்லை. முழு உலகத்திற்கு முன்னால் பரமாத்மா வரவும் முடியாது. குழந்தைகளாகிய உங்களுக்கும் கூட வரிசைக் கிரமமான முயற்சியின்படித் தான் நம்பிக்கை இருக்கிறது. முதலில் ஆத்மா என்பதை நிச்சயம் செய்கிறார்கள், பிறகு நம்முடைய தந்தை மீண்டும் வந்திருக்கிறார், என்று நிச்சயம் செய்கிறார் கள். இப்படி அனைவரும் நம்பிக்கை கொள்கிறார்கள், என்று நீங்கள் புரிந்திருப்பீர்கள். ஆனால் அதுபோலும் இல்லை. இவர் விசித்திரமாக (உடலற்று) இருக்கின்றார். எனவே அடிக்கடி மறந்து விடுகிறது. நாம் ஆத்மாக்கள், பரமபிதா பரமாத்மாவிற்கு முன்னால் இருக்கிறோம், என்பதை மறந்து விடுகிறார்கள். தூய்மையற்ற ஜீவாத்மாக்களை தூய்மையாக்குவதற்காக பரமபிதா பரமாத்மா வருகிறார், என்பதை உலகத்தில் உள்ளோரும் தெரிந்திருக்கிறார்கள். ஜீவாத்மாக்கள், ஆத்மாக்களை தூய்மை யாக்குவதற்காக வரவில்லை. அனைவரும் ஜீவாத்மாக்கள், பரமபிதா பரமாத்மா ஒருவரே ஆவார், அவரை ஜீவன், என்று சொல்ல மாட்டார்கள், ஏனென்றால், அவருக்கு ஸ்தூல-சூட்சும சரீரம் எதுவும் இல்லை. இதை தந்தை வந்து புரிய வைக்கின்றார். நீங்கள்

பெயரையுடைய யாரையெல்லாம் பார்க்கின்றீர்களோ, பிரம்மா, விஷ்ணு, சங்கரின் சித்திரம் பார்க்கிறீர்களோ, அவர்கள் சூட்சும வதனத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கூட சூட்சும ஜீவாத்மாக்களே ஆவர். இவை மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். மனிதர் கள் இன்னார் மகாத்மா, என்று கூறுகிறார்கள். ஆனால் தூய்மையற்ற உலகத்தில் மகாத்மாக்கள் எங்கிருந்து வரமுடியும்! இங்கே முழுமையான தூய்மையாக யாரும் இருக்க முடியாது. அந்த பரம தந்தை தூய்மையாக்கி விட்டு சென்றார். சத்யுக ஆதியில் தேவி-தேவதைகள் இருந்தார் கள். தூய்மையான ஆத்மாக்கள் இருந்தார்கள், இப்போது தூய்மையற்ற ஜீவாத்மாக்கள் இருக்கிறார்கள், என்பதை கண்டிப்பாகப் புரிந்து கொள்வார்கள். அவர்களை மகான் ஆத்மாக்கள், என்று சொல்லலாம். தூய்மையற்ற உலகத்தில் யாரும் மகான் ஆத்மாக்கள் இருக்க முடியாது, என்று பாபா புரிய வைக்கின்றார். அனைவரும் தூய்மையற்ற ஜீவாத்மாக்களாக இருக்கிறார்கள். தூய்மையற்ற ஜீவாத்மாக்கள் கண்டிப்பாக மற்றவர்களையும் தூய்மையற்றவர்களாகத் தான் ஆக்குவார்கள். அங்கே (சத்யுகத்தில்) தூய்மையான ஜீவாத்மாக்கள் இருக்கிறார்கள் என்றால் என்ன செய்வார்கள்? தூய்மையான ஜீவாத்மாக்களாக ஆக்குவார்கள், என்பது கிடையாது. இல்லை. அங்கே அப்படி மாற்றுவதற்கான விஷயம் இருப்பதில்லை. இந்த சமயத்தில் அனைத்தும் தூய்மையான ஜீவாத்மாக்களாக ஆகின்றன. அங்கே அனைவரும் தூய்மையாகத் தான் இருக்கிறார்கள். அந்தளவு தூய்மையாக்குவது யார்? நீங்கள் எப்போது தேவி-தேவதை களாக இருந்தீர்களோ அப்போது தூய்மையாக இருந்தீர்கள், என்று பாபா வந்து புரியவைக் கின்றார். இங்கே வந்து தூய்மையற்றவர்களாக ஆகிவிட்டீர்கள். இந்த உலகமே பாவமான ஜீவாத்மாக்களின் உலகமாகும். வார்த்தைகளை முற்றிலும் தெளிவாக புரிய வைக்க வேண்டும். பாவ ஜீவாத்மா ஏனென்றால் ஆத்மாவும் தூய்மையற்றது, சரீரமும் தூய்மையற்றது ஆகும். பிறகு அங்கே மகாத்மா என்ற வார்த்தை கொடுப்பதில்லை. அங்கே அனைவருமே தூய்மை யானவர்கள், தேவி-தேவதா என்று தான் சொல்லப்படுகிறது. சர்வகுணங்களும் நிறைந்தவர்கள், 16 கலைகள் நிறைந்தவர்கள், அஹிம்சையை தர்மமாகக் கொண்ட ஜீவாத்மாக்களாக இருக்கிறார்கள். முழுமை யாக விகாரமற்றவர்கள் என்றால் சம்பூரண தூய்மை யானவர்கள். சன்னியாசிகள் தூய்மையாக இருப்பதற்கான முயற்சியாளர்கள், என்பது குழந்தை களாகிய உங்களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. நல்ல-நல்ல சன்னியாசிகள் தூய்மையாக இருக்கிறார்கள், அவர்களைத் தான் மகாத்மா என்று சொல்லப்படுகிறது. தூய்மையாக இருப்பதற்காக தனியாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை பக்தி மார்க்கத்தில் மகாத்மா என்பார்கள், ஞான மார்க்கத்தில் அல்ல. ஞானம் மற்றும் பக்தி இரண்டும் - தனிப்பட்டது, என்று பாடப்படுகிறது. அரைக்கல்பம் சத்யுகம்-திரேதாவில் ஞானத்தின் பலன் இருக்கிறது, இங்கே பிறகு பக்தியின் பலன் என்று சொல்லலாம். இது பக்தி மார்க்கமாகும். முதலில் பக்தி கூட அவிபச்சாரி பக்தியாக இருக்கிறது. பிறகு கடைசியில் தமோபிரதானமான விபச்சாரி பக்தி நடக்கிறது. இப்போது விபச்சாரி பக்தியின் இறுதி ஆகிவிட்டது, அப்போது தான் பாபா வந்திருக்கிறார். பாபா ஒரே ஒரு முறை வந்து ஞானத்தின் மூலம் அரைக்கல்பத்திற்கு உங்களுக்கு பலனை உருவாக்குகிறார். நீங்கள் நம்பர் ஒன் முயற்சி செய்கிறீர்கள். சிலரோ இராஜா-இராணி ஆகிறார்கள், இன்னும் சிலரோ பிரஜைகள் அல்லது தாச-தாசிகளாக (வேலைக் காரர்கள்) ஆகிவிடுகிறார்கள், ஏனென்றால் இராஜ்யம்

ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது.

இப்போது நீங்கள் தொலைநோக்கு புத்தியுடையவர்களாக ஆகின்றீர்கள். தொலைநோக்கு புத்தியை திரிகாலதரிசி என்று சொல்லப்படுகிறது. யாருக்கு மூன்று லோகங்கள், மூன்று காலங்கள் பற்றிய ஞானம் இருக்கிறதோ, அவர்களை திரிகாலதரிசி என்று சொல்லப்படுகிறது. இப்போது நீங்கள் மூன்று லோகங்களையும் தெரிந்துள்ளீர்கள். மூல வதனம், சூட்சும வதனம் மற்றும் ஸ்தூல வதனம் ஆக மூன்று லோகங்கள் ஆகிறது அல்லவா? இப்போது நீங்கள் தொலைநோக்கு புத்தியுடையவர்களாக ஆகிவிட்டீர்கள். உங்களுடைய புத்தி வரிசைக் கிரமமான முயற்சியின் படி முதலிலிருந்து கடைசி வரை செல்கிறது. யாராவது பலவீனமாக இருந்தார்கள் என்றால் பந்தயத்தில் பின்னால் நின்று விடுகிறார்கள். இதுவோ மிகவும் தூரமான பந்தயமாகும். ஆத்மாக்களின் பந்தயத்தைப் பற்றி எப்பொழுதும் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் தெரிந்திருப்பீர்கள், நாம் மாணவர்கள், இது நம்முடைய பந்தயமாகும். இந்த குறிக்கோளை அடைந்து பிறகு திரும்பி வர வேண்டும். ஆத்மாக்களாகிய உங்களுக்கு மிக தூரமான பந்தயமாகும். உண்மையில் நாம் அங்கே வசிக்கக் கூடியவர்கள், என்பதை புத்தி தெரிந்திருக்கிறது. ஒரு வினாடியில் நாம் அங்கு சென்று சேர்ந்து விடுவோம், ஜீவன் முக்தி அடைந்தவர்களாக ஆகிவிடுவோம். உண்மையில் நாம் பரந்தாமத்தில் வசிக்கக் கூடியவர்கள். நாம் பரந்தாமம் செல்வோம் பிறகு வருவோம், என்பதை யதார்த்தமான முறையில் புத்தி தெரிந்திருக்கிறது. எப்படி பந்தயத்தில் குறிக்கோளை அடைந்து பிறகு திரும்புகிறார்களோ அது போலாகும். நாமும் கூட பாபாவிடம் செல்வோம் பிறகு திரும்பி வருவோம். இப்போது ஆத்மாக்கள் பந்தயம் கற்றுக் கொண்டிருக்கின்றன. உங்கள் அனைவருக்கும் மன்மனாபவ, என்று அறிவுறுத்தப்படுகிறது, புத்தியின் தொடர்பை தன்னுடைய பாபா மற்றும் பரந்தாமத்தில் வையுங்கள். அங்கே நீங்கள் அசரீரியாக இருக்கிறீர்கள். இது உங்களுடைய புத்தியில் மட்டும் தான் யதார்த்தமான முறையில் இருக்கிறது. மூன்று காலங்கள், மூன்று லோகங்களைப் பற்றிய ஞானம் உங்களுடைய புத்தியில் இருக்கிறது. 84 பிறவிகளைப் பற்றிய ஞானம் வேறு யாரிடமும் இருக்க முடியாது. நாம் இந்த மோசமான உலகத்திலிருந்து, மோசமான சரீரத்தி லிருந்து விடுபட்டு செல்ல வேண்டும், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். நாம் சென்று கொண்டிருக்கிறோம். பாபா தினமும் இந்த பந்தயம் கற்றுக் கொடுக்கிறார். உங்களுடைய பந்தயம் அழிவற்றதாகும். பாபாவை எந்தளவிற்கு அதிகமாக நினைவு செய்கிறீர்களோ, அந்தளவு உங்களுடைய பதிவேட்டில் பெயர் நன்றாக இருக்கும். இவருடைய புத்தியின் யாத்திரை மிகவும் கூர்மையாக இருக்கிறது, என்று சொல்வார்கள். நினைவின் மூலம் தான் பாவகர்மங்கள் அழியும். நினைவு செய்யவில்லை என்றால், விகர்மங்கள் வினாசம் ஆகாத காரணத்தினால் பின்னாலேயே நின்று விடுகிறார்கள். பிரஜையாகவோ அல்லது தாச-தாசியாகவோ ஆவது ஒன்றும் பரிசு கிடைப்பதாகாது. நரனிலிருந்து நாராயணனாகவும் நாரியிலிருந்து லஷ்மியாகவும் ஆவதைத் தான் பரிசைப் பெறுவது என்று சொல்லப்படுகிறது. பாபாவின் வழிப்படி நடந்து ஓட்டம் ஓடினால், பாபா இராஜ்யம் என்ற பரிசைக் கொடுக்கின்றார். சிலரோ இரண்டடி கூட ஓடுவதில்லை. ஒருவேளை பிரஜையாக ஆகக் கூடியவர்களாக இருந்தால் முற்றிலும் தாழ்ந்த நிலையை அடைந்து விடுவர். இங்கே (மதுபன்) இருக்கக் கூடியவர்களாக இருந்தாலும் கூட

இராஜ்யத்தில் மிகக் குறைந்த பதவி அடைவார்கள். உங்களுடைய புத்தி எவ்வளவு தொலைநோக்குள்ள புத்தியாக ஆகியிருக்கிறது.

இப்போது பங்களூர், மதராஸ் குழந்தைகள் அமர்ந்திருக்கிறார்கள், அவர்களுக்கு மதராஸ் மொழியில் (தமிழ்) யாராவது புரிய வையுங்கள். நம்முடைய மொழி ஹிந்தியாகும். கல்பத் திற்கு முன்பு கூட இப்படி புரிய வைக்கப்பட்டிருக்கும். பகவான் அனைத்து மொழிகளும் ஏன் தெரிந்திருக்கவில்லை என்று கேட்பார்கள். ஆனால் நாடகத்தில் அப்படி இல்லை. நாடகத்தில் இருந்தது என்றால் நான் அனைத்து மொழிகளிலும் சொற்பொழிவு ஆற்றுவேன். வித-விதமான மொழியுடையவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், நான் அனைத்து பாஷைகளிலும் பேசுவேனா என்ன? இது நடக்கவே முடியாது. ஒருவர்- இருவருக்கு என்று எதுவரை சொல்-க்கொண்டிருக்க முடியும்? பயங்கர குழப்பமாகி ஆகிவிடும். ஆக கல்பத்திற்கு முன்னால் எந்த மொழியில் புரிய வைத்திருந்தாரோ, அதே மொழியில் தான் புரிய வைக்கின்றார், என்று புரிய வைக்க வேண்டும், ஆகையினால் ஹிந்தியின் வேகம் இருக்கிறது. ஆங்கிலமும் வேண்டும், ஏனென்றால் இவர்களுடைய தொடர்பு அதிகம் ஆங்கிலேயர்களுடன் இருக்கிறது. ரஷியா, அமெரிக்கா போன்றவைகளின் மொழிகள் அதன்-அதனுடையதாகும். ஒரே கிறிஸ்துவ தர்மத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்றாலும் மொழிகள் நிறைய இருக்கிறது. இங்கே கூட அனைத்து பாரதவாசிகளும் ஆதி சனாதன தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் தங்களுடைய தர்மத்தை மறந்து விட்டார்கள். எத்தனை பாஷை களாகி விட்டன. அனைத்தும் கலந்திருக்கிறது. யாருக்கு எந்த மொழியோ அதில் அவர் களுக்குச் சொல்ல வேண்டும். இதில் கூட புரிந்து கொண்டு புரிய வைக்கும் அளவிற்கு மிகுந்த புத்திசாலித்தனம் வேண்டும். துல்லியமாகப் புரிய வைக்கக் கூடியவர்கள் உடன் அழைத்து வரவேண்டும் (மதுபனுக்கு). இது தான் அனைத்தையும் விட பெரிய உயிரோட்ட முள்ள தீர்த்த ஸ்தலமாகும். அவை அனைத்தும் ஜட தீர்த்த ஸ்தலங்களாகும். சாதுக்கள், சன்னியாசிகள், மகாத்மாக்கள் அனைவரும் அங்கு செல்கிறார்கள். மிகவும் தூரம்-தூரமாக செல்கிறார்கள். யாரெல்லாம் பாரதத்தை தூய்மை யாக்கிவிட்டு சென்றார்களோ, அவர்களுடைய கோவில் களுக்குச் செல்கிறார்கள். இவை கூட புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அல்லவா. பாபா கூறுகின்றார், மரத்தினுடைய கிளைகள், இலைகள் அவற்றின் விஸ்தாரத்தை எவ்வளவு புரிய வைப்பது! இவையெல்லாம் சின்ன-சின்ன கிளைகள், என்று நீங்கள் புரிந்து கொண்டீர்கள். கிளையில் கூட எவ்வளவு இலைகள் இருக்கும். கணக்கற்ற மடங்கள் இருக்கின்றன. உங்களுடைய கிளை எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும். எவ்வளவு இலைகள் இருக்க வேண்டும். ஆதி சனாதன தேவி- தேவதா தர்மம் சத்யுகத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது. அப்படி என்றால் ஹிந்துக்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள். ஆனால் ஹிந்துக் களாக கூட இருக்கவில்லை, வேறு தர்மங்களுக்கு மாறிவிட்டார்கள். இது கல்ப விருக்ஷம், ஆரம்பத்தில் ஆதி சனாதன தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். ஹிந்து என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட உண்மையில் ஆதி சனாதன தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் தான், ஆனால் மாறிவிட்டார்கள். நான் வந்து மீண்டும் அந்த தேவி-தேவதா என்று சொல்லக் கூடிய தர்மத்தினை ஸ்தாபனை செய்கிறேன், என்று பாபா கூறுகின்றார். யார் மற்ற தர்மத்திற்கு

மாறிவிட்டார்களோ, மீண்டும் அவர்கள் தான் வந்து ஆஸ்தி எடுப்பார்கள். தேவி-தேவதைகள் என்று சொல்லக் கூடியவர்கள் ஒருவர் கூட இல்லாத போது தான் பாபா வருகின்றார். வந்து உங்களுடைய ஜட நினைவுச் சின்னம் இருக்கிறது பாருங்கள், என்று புரிய வைக்கின்றார். கிறிஸ்து வரும்போது அவருடைய தர்மத்தின் சர்ச்சைகள் போன்றவை நடப்பதில்லை. இங்கேயோ இப்போதும் கூட தேவதைகளின் கோவில்கள் போன்ற அடையாளங்கள் இருக்கின்றன. உங்களுடைய இராஜ்யம் இருக்கும்போது கிறிஸ்து போன்றோரின் பெயர்- அடையாளம் இருக்காது. இங்கேயோ அனைவருடைய பெயர்-அடையாளம் இருக்கிறது. கிறிஸ்து எப்பொழுது வந்தார், கிறிஸ்துவ தர்மம் எப்படி ஸ்தாபனை ஆகியது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். கிறிஸ்து இப்பொழுது எந்த சரீரத்தில் இருப்பார்? கண்டிப்பாக தூய்மையற்ற சரீரத்தில் தான் இருப்பார். அவர் தூய்மையாகத்தான் இருந்தார் அல்லவா. குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் முழு ஞானமும் இருக்கிறது. உங்களை தொலைநோக்கு புத்தி யுடையவர்களாக மாற்றியுள்ளார். ஆத்மாக்களாகிய நாம் எங்கு வசிக்கின்றோம்? ஆத்மாக்கள் எங்கிருந்து வருகின்றன? இது யாருக்கும் தெரியாது. வசிக்கும் இடத்தை பரமாத்மா என்று புரிந்து கொண்டார்கள். உண்மையில் ஆத்மா பொய்யானதாக ஆவதின் மூலம் சரீரமும் பொய்யானதாக ஆகிவிட்டது. மாயை பொய்யானது, சரீரம் பொய்யானது........... மற்றபடி ஆத்மாவில் எதுவும் ஒட்டாது, என்று சாதுக்கள் சொல்லிவிட்டார்கள். தங்களுடைய கருத்தின் விஷயத்தைச் சொல்லி விட்டார்கள். ஆத்மா பொய்யானது என்று ஏன் சொல்வதில்லை, பொய்யான ஆத்மாவின் சரீரமாகும். சரீரத்தைத் தான் பாடையில் அமர்த்துகிறார்கள். ஆத்மாவை பாடையில் அமர்த்துவதில்லை. பாடையில் சரீரம் அமர்த்தப் படுகிறது. ஆத்மா வானது ஒரு சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தில் பிரவேசமாகி இருக்கிறது. இது புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். எந்தவொரு சாது-சன்னியாசிக்கும் நீங்கள் புரிய வைக்க முடியும். இங்கே தூய்மையற்ற உலகில் யாரும் மகாத்மா இல்லை. மகாத்மாக்களை தூய்மை யான ஆத்மாக்கள் என்று சொல்லப் படுகிறது. அப்படி என்றால் சரீரமும் தூய்மையாக வேண்டும். இதுவே கலியுகமாக இருக்கிறது. ஆனால் கன்னிகைகள் விகாரத்தில் செல்லாத வரை பூஜிக்கப்படுகிறார்கள். தூய்மைக்காகத் தான் அழைக்கிறார்கள்-- வந்து எங்களை தூய்மை யாக்குங்கள். அழைத்துக் கொண்டிருக் கிறார்கள் என்றால், நீங்கள் அவர்களை மகான் ஆத்மாக்கள் என்று எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். யாரும் மகாத்மா இல்லை. இவர் விசித்திரமான (சரீரமற்ற) பரமபிதா பரமாத்மா ஆவார். தூய்மையான ஜீவாத்மாக்கள் தேவி - தேவதைகளாக இருந்த நாம், இப்போது தூய்மையற்றவர்களாக ஆகியிருக்கிறோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். தர்மம் கீழானதாக இருக்கிறது. கிறிஸ்துவ மக்கள் தங்களுடைய தர்மத்தை தெரிந்திருக்கிறார்கள். நாங்கள் கிறிஸ்துவர்கள் என்று உடனே சொல்வார்கள். நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த தர்மத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய தர்மத்தை மறந்து விட்டீர்கள். மறந்து விட்டதின் மூலம் தர்மத்தில் கீழானவர்களாகவும், கர்மத்தில் கீழானவர்களாகவும் ஆகி விட்டீர்கள். நீங்கள் உயர்ந்தவர்களாக இருந்தீர்கள், இப்போது இராவணன் கீழானவர்களாக ஆக்கிவிட்டான். இந்த அர்த்தத்தைக் கூட நீங்கள் புரிந்து கொள்ள முடியும். குழந்தைகளாகிய நீங்கள் இப்போது தங்களுடைய எதிர்கால உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்காக தாரணை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

ஸ்ரீமத்தை மீறுவதின் மூலம் அதிர்ஷ்டத்தில் கோடு விழுந்து விடுகிறது. ஸ்ரீமத்தைக் கொடுக்கக் கூடியவர் பாபா என்பதையும் கூட மறந்து விடுகிறீர்கள். ஆக அந்த நாளும் வந்தே விட்டது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அனைவரும் துல்லியமாக தெரிந்திருக்கவில்லை. எப்பொழுது முழுமையாக புரிந்து கொள்வார் களோ, அப்பொழுது கடைசியில் தெரிந்து கொள்வார்கள். இப்பொழுதோ அடிக்கடி மறந்து விடுகிறார்கள். கஷ்டப்பட்டு யாராவது சிலர் உண்மையை சொல்கிறார்கள். பொய் சொல்வதற்கு நேரம் எடுத்துக் கொள்வதில்லை. மாயை நல்ல-நல்ல பலசாலியான குழந்தை களுக்கு அடி கொடுத்து விடுகிறது. நீங்கள் தவறு செய்கிறீர்கள், சேவைக்கு எதிரான காரியங்களை செய்கிறீர்கள், என்று பாபா சொல்கிறார், பாபா அனைத்தையும் தெரிந்திருக்கிறார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தொலை நோக்குப் பார்வையுடையவர்களாக ஆகி மூன்று லோகங்கள் மற்றும் மூன்று காலங்களையும் தெரிந்து புத்தியின் மூலம் பந்தயம் செய்ய வேண்டும். இந்த மோசமான உலகம், மோசமான சரீரத்திலிருந்து விடுபட வேண்டும்.

2) பொய் சொல்லும் பழக்கத்தை நீக்க வேண்டும். ஸ்ரீமத்தை மீறி நடந்து சேவைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடாது.

வரதானம் : லௌகிக உள்ளுணர்வு, பார்வையை மாற்றி அலௌகிகத் தன்மையை அனுபவம் செய்யக்கூடிய ஞானம் நிறைந்த ஆத்மா ஆகுக.

லௌகிக சம்பந்தங்களில் இருந்து கொண்டே, எல்லைக்குட்பட்ட சம்பந்தங்களைப் பார்க்காமல் ஆத்மாவைப் பாருங்கள். ஆத்மாவைப் பார்ப்பதால் குஷி இருக்கும் அல்லது இரக்கம் வரும். இந்த ஆத்மா பாவம், வேறு (மாயாவின்) வசமாக உள்ளார். அஞ்ஞானத்தில் இருக்கிறார். நான் ஞானவான் ஆத்மா என்றால் அந்த அறியாத ஆத்மா மீது இரக்கம் கொண்டு தனது சுப பாவனை மூலம் மாற்றிக் காட்டுவேன். தனது உள்ளுணர்வு மற்றும் பார்வையை மாற்றுவது தான் அலௌகிக வாழ்க்கை ஆகும். எந்தக் காரியத்தை அஞ்ஞானிகள் செய்கிறார்களோ, அதை ஞானம் நிறைந்த ஆத்மாக்களாகிய நீங்கள் செய்யக் கூடாது. உங்கள் சேர்க்கையின் நிறம் அவர்கள் மீது படிய வேண்டும்.

சுலோகன்: தனது சிரேஷ்ட கர்மத்தினால் உலகத் தந்தையின் பெயரை விளங்கச் செய்வது தான் விஷ்வ கல்யாண்காரி ஆவதாகும்.